எம்.சி.ஓ.பி எண்: 6674/2025 தேதி: 06.07.2026

எ,மசா. : 1

பெயர் : ஜவகர்

த/பெ. : செந்தமிழ்செல்வன்

வயது : 35

**சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்**

**முதல் விசாரணை**

நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். மேலும் என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் எ,மசாஆ 1 முதல் 3 வரை தாக்கல் செய்கிறேன்.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் எங்கள் நிறுவனத்தில் நிர்வாக அலுவலராக இருக்கிறேன். 1ம் எதிர்மனுதாரரின் அவருடைய ஆர்சி, ஓட்டுநர்உரிமம், காப்பீடு ஆகியவற்றை தாக்கல் செய்யும் படி நாங்கள் அறிவிப்பு கொடுத்தோமா என்றால் இல்லை. 1வது எதிர்மனுதாரரை எங்களுடைய புலன் விசாரணை அதிகாரி விசாரித்தாரா என்றால் விசாரித்தோம். அவரிடமிருந்து 26.02.2026 தேதியிட்ட கடிதம் பெறப்பட்டது. அறிக்கையை தாக்கல் செய்திருக்கிறேன். விபத்து சமயத்தில் ஜேசிபியை 1ம் எதிர்மனுதாரரின் தம்பி ஓட்டிச்சென்று விபத்தை ஏற்படுத்தினார் என்று அவருடைய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் ஓட்டுநர்உரிமம், காப்பீடு தாக்கல் செய்யப்படவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. ஓட்டுநர் உரிமம்,காப்பீடு காலவதியாகிவிட்டதா என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. குற்ற இறுதி அறிக்கையில் பிரிவு 3,5 மோட்டார் வாகன சட்டத்தின் படி குற்றசாட்டு பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. ஆர்டிஓ இது சம்பந்தமாக நடவடிக்கை எடுத்துள்ளதால் குற்றச்சாட்டு பதிவு செய்யப்படவில்லை. மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் செக் சிலிப் கொடுக்கப்பட்டதாக உள்ளது. அதற்கான ஆர்டிஓ அலுவலகத்திலிருந்து ஆவணத்தை பெற்று தாக்கல் செய்யவில்லை. இந்த வழக்கில் 1ம் எதிர்மனுதாரருக்கு வழக்கறிஞர் ஆஜர் ஆனரா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. 1வது எதிர்மனுதாரர் வழக்கறிஞரிடம் ஓட்டுநர் உரிமம்,

இன்சூரன்ஸ் ஆவணம் தரும்படி கடிதம் அனுப்பினோமா என்றால் இல்லை.

X

<u>**மறுவிசாரணை இல்லை**</u>

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவாிடம் கையொப்பம் பெறப்பட்டது.